அக்கரைப்பற்று மாநகர சபை
அம்பாரை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி மாநகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெறப்பட்டு மாநகர சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்ட 10 வாகனங்களின் பெறுமதி ரூபா 85,487,000 கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் தனிநபர்கள் மூலம் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 347 நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 125,158 கணக்குகளுக்கு கொண்டுவரபபட்டிருக்கவில்லை.

1.3.2 ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 137,654,533 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 3,798,262 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 6,440,748 | |

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.
சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் இணங்காமைகள்

| என்பவற்றுடனான தொடர்பு | |
| --- | --- |
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252 பிரிவு 218 | நிர்வாகம் தொடர்பாக ஆணையாளரினால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை 2016 ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயகச் சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் 571 | 02 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலத்தை விஞ்சியுள்ள ரூபா 2,473,260 பெறுமதியான 120 மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வோர் உள்ளூராட்சி சபைகளும் நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து சேவைக்கட்டணங்களும் தண்டப்பணங்களும் அக்கணக்கில் வைப்பிலிடவேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தும் மாநகர சபையானது அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1989 ஏப்பிரல் 29 ஆந் திகதிய 02/1/10 ஆம் இலக்க சுற்றறிக்கை | மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக மாநகர சபையின் அங்கீகாரத்தினை பெறும் போது பிரதேச சுகாதர வைத்திய அதிகாரியின் சிபாரிசினை பெற்றிருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக சமர்ப்பித்த 61 விண்ணப்பங்களுக்காக அவ்வாறான சிபாரிசு பெறப்படமால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 21,874,474 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 21,293,330 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 581,144 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 ஆதன வரி

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் குடியிருக்கும் 12,873 குடியிருப்பாளர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படவேண்டிய ரூபா 27,003,459 கூட்டு மொத்தமான ஆதன வரிகளில் 23% ஆன ரூபா 6,316,538 தொகையான ஆதன வரிகளே மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 இறைச்சிக் கடை, பொதுச்சந்தை கடை மற்றும் வாகன தரிப்பிட குத்தகை

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான குத்தகை நிலுவை ரூபா 6,481,274 தொகையில் ரூபா 5,428,981 நிலுவைத் தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.2.3 சந்தைக் கடைகளை வாடகைக்கு வழங்கல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான சந்தைக் கடை வாடகை நிலுவை ரூபா 7,039,307 தொகையில் ரூபா 5,239,637 இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

(ஆ) 236 சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், குறித்த ஒப்பந்தக்காலம் 2015 யூலை 05 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் குத்தகைகாரர்களினால் கடைகள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் மேலதிகக்கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 94 சந்தைக் கடைகள் வாடகைக்கு வழங்கப்படாது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மூடப்பட்டுள்ளது. இக் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட 8 வாகனங்கள் மற்றும் 8 உழவு இயந்திரங்கள் இன்றுவரை உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர சபைக்கு சொந்தமான 3 வாகனங்கள், 6 உழவு இயந்திரப் பெட்டிகள் மற்றும் 3 உழவு இயந்திரங்களிற்கு உரிய காலத்திற்குள் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியமையால் அக்காலத்திற்குரிய தண்டப்பணமாக ரூபா 23,460 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 64,598 கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான இருப்புக் கணிப்பீட்டு சபையினால் 60 வகையான 377 பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்யவும், 15 வகையான 89 பொருட்கள் அழிக்கப்படவும், மற்றும் 24 வகையான 89 பொருட்கள் திருத்தப்படவும், சிபாரிசு செய்யப்பட்ட போதிலும், இன்றுவரை அவற்றை நிறைவேற்றுவதற்கு மாநகர சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 06 ஆண்டுகளுக்கு முன்னர் சபை ஊழியர் மற்றும் ஒரு சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 106,003 தொகையான இரு முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள 06 உழவு இயந்திரங்கள், 02 உழவு இயந்திர இழுவைப்பெட்டிகள், 01 டபிள்கெப் வாகனம் மற்றும் 01 எக்ஸ்கவேட்டர் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாது மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றன.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் மாநகர சபையின் நூலகங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 13.69 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் பொருத்துக்களும் 2017 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது நூலக வளாகத்தில் விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2012 ஆம் ஆண்டில் மாநகர சபையிலிருந்து காணாமல் போன ரூபா 535,500 பெறுமதியான கணனிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) ஒப்பந்த முகாமைத்துவம் | பெறுகை நடைமுறை பின்பற்றி ஒப்பந்தம் வழங்குதல். |